
# திராவிடத்தால் வாழ்கிறோம்

835

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

ர.பிரகாசு

# 120 பயணத்தைப் பரவசமாக்கும் பஞ்சப்பூர்!





**`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**

தமிழ்நாட்டின் மைய முடிச்சாகத் திகழும் மாநகரம் திருச்சி. திராவிட அரசியலின் பல்வேறு திருப்புமுனைகளுக்கு வித்திட்ட நகரமும் கூட. அத்தகைய திருச்சி மாநகரில், இதுவரை 'மத்திய பேருந்து நிலையம்', 'சத்திரம் பேருந்து நிலையம்' என்ற இரண்டு பேருந்து நிலையங்கள் இருந்தன. மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து, வெளி மாவட்டங்களுக்கும், கேரளா, கர்நாடகா, ஆந்திரா, புதுச்சேரி உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும் பேருந்துகள் இயக்கப்பட்டன.

சத்திரம் பேருந்து நிலையத்தில் இருந்து, அரியலூர், பெரம்பலூர், கடலூர் உள்ளிட்ட அண்டை மாவட்டங்களுக்குப் பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன. இரண்டு பேருந்து நிலையத்தில் இருந்தும் நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டன.

மக்கள்தொகைப் பெருக்கம், போக்குவரத்து நெரிசல் காரணமாக புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை, நீண்ட காலமாக இருந்து வந்தது. 2021-இல் ஆட்சிக்கு வந்த 'திராவிட மாடல் அரசு' அதற்குத் தீர்வு காணும் விதமாக உருவாக்கியதே 'பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையம்'.

### பஞ்சப்பூர் அல்ல மிஞ்சப்பூர்!

பஞ்சப்பூரில் பேருந்து நிலையம் கட்ட, 30.12.2021 அன்று திருச்சியில் நடைபெற்ற அரசு விழாவில், 'திராவிட மாடல் நாயகர்' முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து 38 ஏக்கர் பரப்பளவில், தரைத்தளம் மற்றும் முதல் தளம் என இரண்டு அடுக்குகளைக் கொண்ட பேருந்து நிலையம் கட்டப்பட்டது. 162.18 கோடியில் பன்நோக்கு வணிக வளாகம் மற்றும் 246.18 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் என மொத்தம் 408.36 கோடி மதிப்பில் சிறந்த தொழில்நுட்ப வசதிகளுடன், சர்வதேசத் தரத்தில், தனித்துவமாகக் கட்டியெழுப்பப்பட்ட பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திற்கு, 'கட்டமைப்புகளின் நாயகர்' முத்தமிழறிஞர் கலைஞர் பெயரைச் சூட்டியது திராவிட மாடல் அரசு.

கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தைப் போல பார்ப்போரைப் புருவம் உயர்த்த வைக்கும் வகையில், பிரமாண்டமாக, குளிரூட்டப்பட்ட, முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தை 09.05.2025 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். அங்கு அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையையும் திறந்துவைத்து, பேருந்து நிலையத்தைச் சுற்றிப் பார்த்தார். பொதுமக்களுக்காக செய்யப்பட்டுள்ள வசதிகளையும் முதலமைச்சர் பார்வையிட்டுக் கேட்டறிந்தார்.

அப்போது பேசிய முதலமைச்சர், "இது பஞ்சப்பூர் அல்ல, எல்லா ஊரையும் மிஞ்சப் போகிற மிஞ்சப்பூர் என்றே தோன்றுகிறது. விமான நிலையத்துக்கு இணையான வசதிகளுடன் பேருந்து நிலையம் அமைக்கப் பட்டுள்ளது. 'மின்தூக்கி', 'நகரும் படிக்கட்டு', 'ஏ.சி. வசதி' ஆகியவை உள்ளன. 'தமிழ்நாட்டின் இதயம்' போன்ற திருச்சிக்கு இப்படியொரு பேருந்து முனையம் அவசியம்" என்றார்.

### என்னென்ன வசதிகள் உள்ளன?

பேருந்து நிலையத்தின் தரைத்தளத்தில், 124 பேருந்துகள், நீண்ட நேர நிறுத்த பேருந்துகள் 141, குறைந்த நேர நிறுத்த பேருந்துகள் 80 என 345 வெளியூர் பேருந்துகளும், முதல் தளத்தில் 56 உள்ளூர் நகரப் பேருந்துகள் என மொத்தம் 401 பேருந்துகள் ஒரே சமயத்தில் நிறுத்தும் வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. மேலும், 78 கடைகள், 4 உணவகங்கள், 6 மின் தூக்கிகள், 6 இயங்கும் படிக்கட்டுகள், 49 எல்.இ.டி. அறிவிப்புப் பலகைகள் கொண்ட அதிநவீன பேருந்து முனையமாக, சர்வதேச தரத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது. முதியோர்கள் மற்றும் லக்கேஜ்களை சுமந்து செல்வோரின் தேவைக்காக, 11 நபர்கள் அமர்ந்து செல்லும் பேட்டரி கார்களும் இயக்கப்படுகின்றன.

பாதுகாப்பு வசதிகளுக்காக 166 கண்காணிப்பு கேமராக்கள், பயணிகளின் தேவைக்காக ஏ.டி.எம். மையங்கள், பயணச்சீட்டு முன்பதிவு மையம், பொருட்கள் பாதுகாப்பு அறை, பயணியர் ஓய்வறை, குழந்தைகளுக்குப் பாலூட்டும் அறை, நேரக் காப்பாளர் அறை, 50 மீட்டருக்கு ஒன்று வீதம் என சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் அமைப்புகள், ஜெனரேட்டர் வசதியும் செய்யப்பட்டுள்ளன. புத்தகக் கடைகள், இலவச செல்போன் சார்ஜிங் மையங்கள், கழிப்பிடங்கள். மாற்றுத் திறனாளிகளுக்கான பிரத்யேக கழிப்பிடங்கள். குளியலறை, ஒப்பனை அறைகள், மாற்றுத் திறனாளிகளுக்கான தனி ஒப்பனை அறைகளும் உள்ளன. பேருந்து நிலையத்திற்கு வந்து செல்வோரின் வசதிக்காக 100 ஆட்டோக்கள் நிறுத்துமிடம், 1,923 இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், 212 கார்கள் நிறுத்துமிடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் தங்கி ஓய்வெடுப்பதற்காக, தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் 208 படுக்கை வசதிகளுடன் தனியாக ஒரு தங்கும் விடுதியும், வாகனங்கள் நிறுத்துமிட வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. பயணிகளின் வசதிக்காகப் பேருந்து முனையத்தின் தரைத்தளம் முற்றிலும் குளிரூட்டும் வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. காற்று மாசினைக் கட்டுப்படுத்தி, குளிர்ந்த சூழலை ஏற்படுத்தும் வகையில், பேருந்து முனையத்தைச் சுற்றிலும் பசுமை அமைப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன. உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்புகளைத் தமிழ்நாட்டுக்கு தரும் பொற்காலமாக 'திராவிட மாடல் அரசு' வரலாற்றில் தன் பக்கங்களை எழுதிக் கொண்டிருக்கிறது என்பதற்கான சான்றே **'முத்தமிழறிஞர் கலைஞர் பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையம்'.**

**...சாதனை தொடரும்**

புதிய பேருந்து முனையம் திறப்பு விழாவையொட்டி, கும்பகோணம் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 102 புதிய பேருந்துகளும், விழுப்புரம் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 8 புதிய பேருந்துகளும், கோயம்புத்தூர் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 10 பேருந்துகளும் என மொத்தம் 120 புதிய பேருந்துகள் பயன்பாட்டையும் முதலமைச்சர் தொடங்கிவைத்தார்.

தந்தை பெரியார் பெயரில் காய்கறி அங்காடி, பேரறிஞர் அண்ணா பெயரில், கனரக சரக்கு வாகன முனையம், முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில், ஒருங்கிணைந்த பேருந்து முனையம் என முப்பெரும் தலைவர்கள் பெயரில், திருச்சி மாநகருக்கு முப்பெரும் திட்டங்களைத் தந்துள்ளது திராவிட மாடல் அரசு.





> **இது பஞ்சப்பூர் அல்ல, எல்லா ஊரையும் மிஞ்சப் போகிற மிஞ்சப்பூர் என்றே தோன்றுகிறது.**

## `பிறப்பால் அனைவரும் சமம்'

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியான, 'நீயா நானா' நிகழ்ச்சியில் 3 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு விவாதத்தில், ஒருபுறம் சாதிப் பெருமை பேசும் கிராமத்து இளைஞர்களும், மறுபுறத்தில் அந்தப் பெருமை தேவையில்லை என்று அதை எதிர்க்கும் படித்த கிராமத்து இளைஞர்களும் பங்கேற்றனர். அந்த விவாதத்தில் ஓர் இளைஞர் சாதிப்பெருமை குறித்துப் பேசியதும், அவர் நடந்துகொண்ட விவாதமும் கேலி, கிண்டலுக்கு உள்ளாகியது.

அப்போதே அவருக்கு எதிர்த்தரப்பில் இருந்த தமிழ்ச்செல்வி என்ற இளம்பெண், "சாதிப்பெருமை என்பது பிறப்பில் வருவதல்ல, அது திணிக்கப்படுவது. அதை உணராமல் இளைஞர்கள் அதை உள்வாங்கிக் கொள்கிறார்கள். ஒருகாலத்தில் நானும் அப்படித்தான் இருந்தேன். ஆனால், அதெல்லாம் தவறு என்று உணர்ந்து, அந்த மனநிலையில் இருந்து வெளிவந்துவிட்டேன். அந்த மனநிலை அசிங்கமானது" என்றும் பேசியிருந்தார்.

இளம்பெண் கூறியதை, அப்போது அந்த இளைஞர் ஏற்கவில்லை. ஆனால், இரண்டு காணொளித் துணுக்குகளும் சமூக வலைத்தளங்களில் மிகப்பெரிய அளவில் வைரலாகி, பேசுபொருளாகின. இப்போது 3 ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் அந்த இளைஞர், வேறொரு தலைப்பில் நடைபெற்ற 'நீயா நானா' நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளார். "நான் இப்போது சாதி குறித்துப் பேசுவதில்லை, அவ்வாறு பதிவிடுவதும் இல்லை. என் வேலையைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அன்றைக்கே என் எதிரே இருந்த ஓர் அக்கா கூறினார், நான் புரிந்துகொள்ளவில்லை. இப்போது உணர்ந்துவிட்டேன். பிறப்பால் அனைவரும் சமம்" என்று கூறியுள்ளார் அவர். தற்போது இந்த காணொளித் துணுக்கும் பாராட்டுக்களோடு வைரலாகியுள்ளது.

ஓர் இளைஞரின் மனமாற்றத்திற்கு வித்திட்ட அந்த உரையாடல், சமூகத்தோடு தொடரப்பட வேண்டியது.

## ப்ளாஷ்பேக்





ஔவை அருள்

### துணைமுதலமைச்சரான நாளின் நினைவு!

2009-ஆம் ஆண்டு, மே மாதம் 29-ஆம் தேதி, முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியின்போது, மாண்புமிகு துணை முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட, இன்றைய முதலமைச்சர் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார் என் தந்தை, நினைவில் வாழும் ஔவை நடராசன் அவர்கள். உடன் பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களின் நேர்முக உதவியாளராகப் பணியாற்றிய ரவி மற்றும் பள்ளிப்பட்டு பிரமுகர் ராஜேந்திரபிரசாத் ஆகியோரும் தலைவரைச் சந்தித்து வாழ்த்தினர்.

**– ஔவை அருள், இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## மலரும் நினைவு

### ஆகாஷ்வாணி ஒழிக!

1959-ஆம் ஆண்டில், 'வானொலி' என்று புழக்கத்தில் இருந்த சொல்லை, 'ஆகாஷ்வாணி' என்று அன்றைய ஒன்றிய அரசு மாற்றியது. அதற்கெதிராக அறைகூவல் விடுத்த கழகம், மீண்டும் 'வானொலி' என்று சொல்லப்படும் வரை, தமிழர் வாழ்வில் அக்கறைகொண்ட எவரும் வானொலி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொண்டது. அதை ஏற்றுக்கொண்டு, பாடகர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் வானொலி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள மறுத்துவிட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131